# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்),
தொலைபேசி:044-2951 5590

**ஆணை நாள் - 03.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா.செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 9954/F/2023**

திரு. A.சக்தி .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்டஆட்சியரின் நேர்முக உதவியாளர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், .. பொது அதிகார அமைப்பு
திருப்பத்தூர்-635 601

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 29.11.2022 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 04.03.2023 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 01.06.2023 |

*******

**ஆணை**

மேற்குறிப்பிட்ட இவ்வழக்கு இன்று (03.04.2025) இவ்வாணையத்தால் நேரடி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு. A.சக்தி ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7-ன்கீழ் மனுதாரர் விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்பது அவசியமாகிறது. இருப்பினும் மனுதாரர் இவ்வாணையத்தின் அழைப்பாணையைப் பெற்றுக் கொண்டும், இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. அவரது வருகையின்மையை இவ்வாணையம் பதிவு செய்கிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு பெ.சென்னகேசவன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பத்தூர் நேரில் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 8-ன் கீழ் பொதுத் தகவல் அலுவலர் விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்பது அவசியமாகிறது. இருப்பினும் பொதுத் தகவல் அலுவலர் இவ்வாணையத்தின் அழைப்பாணையைப் பெற்றுக் கொண்டும், இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. அவரது வருகையின்மையை இவ்வாணையம் பதிவு

செய்கிறது. அவர் சார்பாக திருமதி. தேன்மொழி தலைமையிடத்து துணை வட்டாட்சியர், திருப்பத்தூர் மாவட்டம் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் Land Revenue Settlement Register பதிவு செய்யப்பட்ட 1887 முதல் 1980 வரை பதிவேடு நகல், RSR Resettlement Registers 1901 முதல் 1938 வரை பதிவு செய்யப்பட்டட பதிவேட்டின் நகல்கள் என்பது போன்ற முழு விவரங்களை 17 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்த பின்னரும் தனக்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து, தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலர் நாளதுவரை மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்படாததால், மனுதாராரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (03.04.2025) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ந.க.எண். ஆர்.எஸ்.1-72-2025 நாள் 01.04.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் வழங்க தயாராக இருப்பதாக தெரிவித்து அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தில் சமர்ப்பித்தார்..

5. இன்றைய விசாரணையின் முடிவில், மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவலையும் இணைத்து பரிசீலனை செய்கையில் மேல்முறையீட்டாளருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்பது தெரிய வருகிறது. எனவே இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கின்றது:-

- மேல்முறையீட்டாளர் கோரும் தகவல்கள் காலம் கடந்த நிலையில் கோப்புகள் கிடைப்பது அரிது என்று தெரிவித்திருப்பது சட்டப்படி ஏற்கதக்கதல்ல. எனவே மேல்முறையீட்டாளர் கோரியுள்ள தகவல்கள் / நகல்களையும் அலுவலகக் கோப்புகளைத் தேடிப்பார்த்து வழங்க வேண்டும் என்று பொதுத் தகவல் அலுவலருக்கு இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது. அவ்வாறு அந்தக் கோப்புகள் கிடைக்கப்பெறவில்லையென்றால், அந்தக் கோப்பை கண்டுபிடிப்பதற்கு என்னென்ன முயற்சிகள் மற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதனை விளக்குகின்ற வகையிலான பிரமாண வாக்குப்பத்திரம் (Sworn Affidavit) ஒன்றினை இவ்வாணையத்திற்கு 30 தினங்களுக்குள் அனுப்பி வைத்து அதன் நகலினை மேல்முறையீட்டாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/(மா.செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 9954/F/2023</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்டஆட்சியரின் நேர்முக உதவியாளர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருப்பத்தூர்-635 601

**<u>மனுதாரர் SA 9954/F/2023</u>**

திரு. A.சக்தி
த/பெ அமாவாசை கவுண்டர்,
குட்டூர் கிராமம்,
கொத்தக்கோட்டை அஞ்சல்,
வாணியம்பாடி வட்டம்,
திருப்பத்தூர் மாவட்டம்-635 652

Copy to: File
VPS /PA /15.04.2025